## ஒதுக்கீட்டு தலைப்பு – 112 வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2011 ஆம் ஆண்டு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 திசெம்பர் 21 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 ஆம் 152 ஆம் ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணப்படுதல், தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது பிழைகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைத் கொண்டிராத கணக்குகளையும் இணைக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் அமுலாக்குதல் மற்றும் பேணுதல் இப் பொறுப்புக்களில்

உள்ளடக்கபொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியாயபூர்வமாக கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**1. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 7,037,873,230 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 6,983,943,491 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சினதும் தேறிய சேமிப்பு ரூபா 53,929,739 ஆக இருந்ததுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் ஒரு சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினத் தன்மை | மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு* | சேமிப்புக்கள் | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 5,541,227,000 | 6,060,648,480 | 6,788,081 | 0.11 |
| மூலதனம் | 831,550,000 | 977,224,750 | 47,141,658 | 4.82 |
| கூட்டுத்தொகை | 6,372,777,000 | 7,037,873,230 | 53,929,739 | 0.77 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

11201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27,475,000 | 21,094,180 | 17,000,000 | 21,807,126 | 110,000,000 | 102,407,229 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கில் ரூபா 1,553,548,264 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 505,566,685 ஆனதுடன் இது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்கு இல. | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0006/0071/000 | 35,857,443 |
| 6000/0000/00/0015/0025/000 | 436,554,242 |
| 6000/0000/00/0011/0559/000 | 33,155,000 |
| கூட்டுத்தொகை | 505,566,685 |

## 2.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஐ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.5 முதல் 2.8 வரையான பந்திகளில்

குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) கணக்குகள் சமர்ப்பித்தல்**

அமைச்சால் மீளாய்வாண்டிற்குரிய 11201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று 2012 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது கணக்காய்விற்கு 2012 மே 18 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

(i) 1994 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9(IV) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2012 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 13,166,650 ஆகக் காணப்பட்டது.

**(இ) பாதீட்டு முரண்கள்**

(i) 112-02-02-2502 (3)(17) ஏனைய மூலதனச் செலவினங்களின் கீழ் இலங்கையின் கண்ட மேடை வெளிவிளிம்பை வரையறை செய்வதற்கான கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூபா 4,550,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 3,435,000 தொகை வேறு மூலதனச் செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு எஞ்சிய தொகையில் 2009 ஆம் ஆண்டிற்குரித்தான அச்சீட்டுச் செலவினத்திற்காக ரூபா 1,113,246 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2011 ஆம் ஆண்டின் போது இக் கருத்திட்டத்தின் செயற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2010 ஆம் ஆண்டின் போதும் இக் கருத்திட்டத்திற்காக ரூபா 83,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 23,000,000 தொகை நி.பி. 66 இன் மூலம் மாற்றப்பட்டு ரூபா 60,000,000 தொகை எஞ்சியிருந்தது.

(ii) 112-02-03-2502(1) ஏனைய மூலதனச் செலவினங்களின் கீழ் சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 10,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 9,900,000 தொகை நி.பி. 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய செலவினம் ரூபா 14,829 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், இவ் அபிவிருத்திச் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாக திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**(ஈ) கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2011 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருடாந்த செயற்பாட்டு அறிக்கை**

மேற்குறித்த (இ) இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கும் இதனை அடுத்தும் அமைச்சினால் வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கட்டுநிதிக் கணக்குகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இமைச்சிற்கு ரூபா 1,553,548,264 தொகையான கட்டுநிதி வரவு மீதி காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| 1ஆண்டிற்குக் குறைவான | 1 ஆண்டிற்கு மேற்பட்ட 2 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 3 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி செலவு |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 194,726,622 | 783,146,800 | 208,481,472 | 367,193,370 | 1,553,548,264 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் தீர்க்கப்பட்டிராத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,299,382,810 ஆகக் காணப்பட்டது.

(ii) 2010 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக திறைசேரியிலிருந்து ரூபா 498,770,000 தொகையான கட்டுநிதி கிடைக்கப்பெற்றிருந்தது. அப் பெறுவனவு தவறான வைப்புப் பெறுவனவாகக் கருதப்பட்டு வைப்புக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு மீள கட்டுநிதிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் கட்டுநிதிக் கணக்குகளில் இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. ஆகையால் வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் மூலம் ஓய்வூதியங்களைச் செலுத்துகையில், ஓய்வூதியச் செலவின விடயத்தின் கீழ் கணக்கிடப்படாது வைப்புக் கணக்கின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2010 ஆம் ஆண்டின் ரூபா 498,270,000 தொகை ஓய்வூதியமாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இத் தவறு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 121,391,367 தொகை ஓய்வூதியமாகக் கணக்கிடப்பட்டு சீராக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 377,378,633

தொகையான ஓய்வூதியம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்காக அமைச்சால் அலுவலகத்திற்கும் இரு திணைக்களங்களுக்காக ரூபா 14,573,967 தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய அலுவலகம் மற்றும் திணைக்களங்களின் நான்கு செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு மேற்படுவதை தடுப்பதற்காக மீளாய்வாண்டின் போது அச் செலவின விடயங்களுக்கு மிகையறவீடு செய்து அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iv) அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளின் ரூபா 1,553,548,264 மீதி நிலவியதுடன் அம் மீதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்குத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அம் மீதிகளில் தீர்க்கப்படாத முற்பணங்கள் ரூபா 688,775,103 ஆகவும் வெளிநாட்டுத் தூதரகங்களின் ஆண்டின் இறுதியிலாக காசு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 361,839,917 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 502,933,244 தொகையான கட்டுநிதி மீதி திறைசேரிக்குத் தீர்த்துவைக்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணம் 373(4) இன் பிரகாரம் வெளிநாடுகளில் இலங்கை தூதரகங்களிற்கு உரித்தான கட்டுநிதிகளில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்த மீதிகள் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுக்கல்வாங்கல்கள் தீர்க்கப்படும் சந்தர்ப்பங்களின் போது அந் நாட்டின் வங்கிக் கணக்கில் காணப்பட்ட மீதியைக் காண்பிக்கும் வங்கி சான்றிதழும் அம் மீதி காசேட்டில் காணப்படும் மீதி மற்றும் இணக்கம் செய்யப்பட்ட கூற்றுப் பதிவும் ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதரகங்களின் மூலம் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதாக உரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் மேற்குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சில்லறைக் காசுக்கட்டுநிதியால் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான கணக்கீடுகள் திசெம்பர் 31 ஆம் திகதி கணக்குகள் தீர்க்கப்படுவதற்கு முன்னர் கணக்கிடப்பட்டு வங்கி மீதி தொடர்பான சான்றிதழும் இணக்கக் கூற்றுக் குறிப்புடன் சில்லறைக் காசு மீதி சரிபார்க்கப்பட்டு இதுபற்றி தூதரக சேவைத் தலைவரின் கையொப்பத்துடன் சான்றிதழும் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) நிதிப் பிரமாணம் 372 இன் பிரகாரம் கட்டுநிதியும் துணைக் கட்டுநிதியும் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையிலும் குறையாத வகையில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தூதரகங்களின் வீட்டு வாடகைக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 132,735,617 தொகையானதுடன் இதில் 1981 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் மீதியும் காணப்பட்டன. இவ்வாறே தற்போது குடியிருப்பாளர்கள் அல்லாத 71 வீடுகளுக்காக ரூபா 9,662,154 மூட்டுத்தொகையான தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அம் முற்பணங்கள் தீர்க்கப்பட்டிராததுடன் அமைச்சுக்களிலும் தூதரகங்களிலும் எவ்வித தகவல்களும் இல்லாத 34 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத போக்குவரத்துச் செலவின முற்பணங்கள் ரூபா 5,874,998 ஆன மீதியும் 145 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட தீர்க்கப்படாத வீட்டு வாடகை முற்பணங்களான ரூபா 20,124,538 தொகையான மீதியும் தொடர்பாக அறவீடோ அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கோ உரிய நடவடிக்கைகள் நீண்ட காலமாக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பொது வைப்புக் கணக்கு

----------------------------------------

மீளாய்வாண்டின் போது 05 பொது வைப்புக் கணக்குகள் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 505,566,685 ஆகக் காணப்பட்டது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) காலப்பகுப்பாய்வு மற்றும் தனியான மீதிப் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் பதிவேடுகளும் சிக்கலின்றி பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 6000/0000/00/0003/0180/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 158,999 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் செலவு வைக்கப்பட்டமைக்கு உரித்தான விபரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 6000/0000/00/0015/0025/000 கணக்கின் கீழ் உப கணக்கான 15/25/01 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 33,679,456 ஆகக் காணப்பட்டதுடன் அக் கணக்கிற்கு மாத்திரம் தனியான மீதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வைப்புப் பதிவேட்டின் படி ஆண்டின் ஆரம்ப மீதியில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிராத ரூபா 18,681,279 தொகையான மீதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான பதிவேட்டின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ரூபா 505,421 தொகையான வைப்பு மீதி நிலவிய போதிலும் அம் மீதியும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தீர்க்கப்படாத மீதி

-----------------------------

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. உதுரு மிதுரு யாழ்தேவி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து ரூபா 5,696,170 தொகை கிடைக்கப்பெற்றிருந்தது. இதில் 2010 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,862,793 தொகை இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒப்படைக்கப்படாது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 1,833,377 தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. வெளிவிவகார அமைச்சு 2011 பொது வைப்புப் பதிவேட்டு ஆய்வின் போது தீர்க்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடை, செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் மரணித்தவர்களுக்காகக் கிடைக்கப்பெற்ற நட்டஈட்டுத்தொகையாக கூட்டுத்தொகை ரூபா 1,081,052 தொகை 2012 ஆகஸ்டில் உள்ளவாறும் உரிய தரப்பினருக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

(i) விடய இல. 11201 இன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் தொடர்பான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,844,809 ஆகக் காணப்பட்டதுடன் நிலுவையாகக் காணப்பட்ட மீதி அறவிடப்படுவதிலான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது. இம் மீதியின் 3 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையாகக் காணப்பட்ட மீதியின் கூட்டுத்தொகை ரூபா 2,875,674 ஆகக் காணப்பட்டது.

(ii) ரூபா 2,372,275 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத மீதிகள் இனங்காணப்படுவதற்கும் ரூபா 201,177 கூட்டுத்தொகையான சம்பளமற்ற லீவைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் மீதிகளை அறவிடப்படுவதற்கும் ரூபா 72,712 கூட்டுத்தொகையான சீராக்கப்பட வேண்டிய மீதியைச் சீராக்குவதற்கும் 2013 பெப்ரவரி 28 இல் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 59 உத்தியோகத்தர்களின் ரூபா 344,628 தொகையான செலவு மீதி காணப்பட்டது. இவ் உத்தியோகத்தர்களின் ஆரம்ப மீதிகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட பணமும் சரியாகச் சீராக்கப்பட்டு இறுதி மீதிகள் முன்கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது மேலதிக அறவீடுகளாக கணக்கிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iv) பொது வைப்புக் கணக்கீட்டுத் தவறுகளாகக் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு தூதரகப் பதவியணியின் 87 பேரிடமிருந்து ரூபா 619,425 தொகையான கடன் தவணைப்பணம் மற்றும் அமைச்சுப் பதவியணியின் 111 பேரிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 849,161 தொகையான பணம் தீர்க்கப்படாது அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.5 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | தாபன விதிக்கோவைகள் | | |
| | XIV ஆம் அத்தியாயத்தின் 27: 6 ஆம் பிரிவு | 22,700,567 | அமைச்சால் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 1 – 16 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது போக்குவரத்துச் செலவின முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 27: 8 ஆம் பிரிவு | 467,474 | தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம், இரு உத்தியோகத்தர்களுக்கு 1997 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 182,946 தொகையும் ரூபா 79,273 தொகையுமான முற்பணங்கள் தீர்க்கப்படாதிருக்கையில் அவ்விரு உத்தியோகத்தர்களுக்கும் முறையே ரூபா 179,557 தொகையும் ரூபா 25,698 தொகையுமாக மேலும் முற்பணங்கள் 1998 ஆம் ஆண்டின் போதும் வழங்கப்பட்டிருந்தன. ரூபா 467,474 கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டு 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நி.பி. 212(2) (V) | 323,178 | 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக 6 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 323,178 கூட்டுத்தொகையான சம்பள முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்தலிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

வெளிநாட்டலுவல்கள் அமைச்சால் 2011 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வழங்கப்பட்டு எனினும் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராத காலங்கடந்த காசோலைகள் தொடர்பாக நி.பி. 396 (இ) பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறாகும்.

| தூதரகங்கள் | வெளிநாட்டு விடயத்திற்கான பணம் | வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராது 6 மாதங்கள் கடந்த காசோலைகளின் பெறுமதி |
|---|---|---|
| கென்பரா | ஒ.டொ | 202 |
| கென்பரா | ஒ.டொ | 404 |
| பிரான்ங்பட் | யூரோ | 62 |
| புதுடில்லி | இ.ரூபா | 341,801 |
| நியூயோக் | அ.டொ. | 1057 |
| ஓட்டாவா | க.டொ | 46,416 |
| கடார் | ரியால் | 51,365 |
| ஸோல் | வோன் | 180,000 |
| டோரென்டோ | க.டொ | 1,079 |
| வொஷிங்டன் | அ.டொ | 12,746 |

**2.7 நட்டங்கள் மற்றும் இழப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உரித்தான ரூபா 21,039,376 தொகையான நட்டம் தொடர்பாக நி.பி. 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று நிலை | 255 | 209 | 46 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 503 | 422 | 81 |
| (iv) | ஆரம்ப நிலை | 623 | 606 | 17 |
| (v) | ஏனையவை (அமைய, தற்காலிகமான, ஒப்பந்த அடிப்படை) | 06 | 05 | 01 |

| | | | |
|---|---|---|---|
| | -------- | -------- | ------ |
| கூட்டுத்தொகை | 1390 | 1244 | 146 |
| | ===== | ==== | === |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 146 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.